RS Polyclinic
OUR REGISTERED DOCTORS
Dr M. Rajkumar — Sr Vascular Surgeon — 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari — Sr Eye Surgeon — 9444 288784
Dr Sathish Rajkumar — Laparoscopic & Laser Surgeon — 9445 401793
Dr Shanthi R — Sr Vascular Surgeon — 9884 650945
Dr Salma R — General Physician — 97780 87742
Dr Praveena E — Sr ENT Surgeon — 9944 100443

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 22 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 134

தவெக ஆட்சியில் உயிருக்கும் பயிருக்கும் பாதுகாப்பு இல்லை! டி.ஆர்.பி. ராஜா

சென்னை – 22 நவம்பர், 2026 தவெக ஆட்சியில் மக்களின் உயிருக்கும் விவசாயப் பயிர்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்று திமுக முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், காவிரி நீர் விவகாரம் மற்றும் டெல்டா விவசாயிகளின் தற்போதைய நிலை குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

காவிரியில் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய 11 டிஎம்சி பற்றாக்குறை நீரைப் பெறுவதற்காகச் சரியான வாதங்களை முன்வைக்கத் தவறியதால், தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேட்டூர் அணையிலும் போதிய தண்ணீர் இல்லாததுடன், பருவமழையும் எதிர்பார்த்த அளவில் பெய்யாததால் டெல்டா மாவட்ட விவசாயிகள் கடுமையான பாதிப்பைச் சந்தித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

விளைந்த சம்பா பயிர்களைக் காப்பாற்றுவதற்காக விவசாயிகள் தங்களது சொந்தப் பணத்தைக் கொடுத்து தண்ணீரை வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயிர்கள் கருகுவதைத் தடுக்கத் தண்ணீரை விலைக்கு வாங்க வேண்டிய அவல நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இதைவிட டெல்டா விவசாயிகளுக்கு வேறு என்ன கொடுமை இருக்க முடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விவகாரத்தில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய டி.ஆர்.பி. ராஜா, திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் ஏற்கெனவே வலியுறுத்தியபடி அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியபடி வறட்சியால் ஏற்பட்ட பாதிப்புகளைக் கணக்கிட்டு விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

விவசாயிகளுக்குத் தேவையானது வெற்று வாக்குறுதிகள் அல்ல; விவசாயத்தைக் காப்பாற்றுவதற்கான தண்ணீரும் அவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பும்தான் என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.